131
2283

பிசமில்லா இற்றகுமா னிற்றகிம்.

இஃது

முத்துப்பேட்டையில் அடங்கி விளங்கும்

மகத்துவ மிகுத்த சிரோமணியாகிய

ஹலறத்

# ஷைகுதாவூ தொலியுல்லா பேரில்

குலசேகரன் பட்டணம்

சர்க்கரைசாகிபுத்தம்பியவர்கள் குமாரராகிய

## அல்லாபிச்சைப் புலவரவர்கள் பாடிய

## பாடல்கள்

268

முத்துப்பேட்டை

சேக்கா மரைக்காயரவர்கள் குமாரர்

முகம்மது முகியித்தீனவர்களும்

சேகுக்கண்டு மரைக்காயரவர்கள் குமாரர்

முகம்மது மீராலெப்பை மரைக்காயரவர்களும்

அப்துல் காதிறவர்கள் குமாரர்

சு-முகம்மது முகியித்தீனவர்களும்

அதிவீராமன் பட்டணம்

சேக்கா மரைக்காயரவர்கள் குமாரர்

அலித்தம்பிமரைக்காயரவர்களும்

கேட்டுக்கொண்டபடி

மேற்படி

அல்லாபிச்சைப்புலவரவர்களால்

சென்னபட்டணம்:

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டன.

முதற்பதிப்பு.

ஹிஜ-றத்து ஹுகூ௵ றபீவுல் அவ்வல்மீ.

1883.

பிசமில்லா கிற்றகுமா னிற்றகீம்.

இஃது

முத்துப்பேட்டையில் அடங்கிவிளங்கும்

மகத்துவமிகுத்த சிரோமணியாகிய

ஹலறத்

# ஷைகுதாவூ தொலியுல்லாபேரில்

குலசேகரன் பட்டணம்.

சர்க்கரைசாகிபுத்தம்பியவர்கள் குமாரராகிய

அல்லாபிச்சைப் புலவரவர்கள்பாடிய

பாடல்கள்.

## முனாஜாத்து.

### காப்பு. விருத்தம்.

ஆவெனு மொருசொல்லாலே யனைத்தையு மமைத்தெங்காளுங்
காவல்செய் தாளுகின்ற கருணைசேர் கத்தனேயென்
நாவினன் முனாஜாத்தோத நயம்பெறு நாகரீக
மேவுநின் னருளைத்தந்தே மேன்மையைப் புரிகுவாயே.

ஜெயமுறு நபிகணாதர் செய்யிது நபியுல்லாதம்
நயமுறும் போதபாத நம்பிய வேதபோதன்
மயமுறுஞ் செல்வசித மன்னிய நுந்தம்பாதந்
தயையுற வருள்வீர்ஷைகு தாவுதே யொலியுல்லாவே. (௧)

பனியிசுருயீல் கூட்டப் பாத்திபரே பண்போங்குந்
தனியவன் கிருபைபெற்ற தயாளரே சங்கையான
வினிமைசேர்ந் திலங்குகின்ற வியல்புள நுந்தம்பாதந்
தனிநித மருள்வீர்ஷைகு தாவுதே யொலியுல்லாவே. (௨)

வேந்தர்கள் பரவும்பாத வேந்தரே வெற்றியார்ந்த
சாந்தநற் குணமேபெற்ற சாகிபே நுந்தமேலாஞ்
சேந்தவம் போருகத்தி[illegible] சிறப்புறு கின்றபாதந்
[illegible] தாவுதே யொலி[illegible]ல்லாவே. (௩)

உயிர்செயத் தொறுவன்றன்றன் பாரினி லுழவுசெய்தே
செயிர வரும்போதங்ஙன் றெறித்திட வுதிரமாங்கே
*மயமுறு மிரண்டுகண்ணு மறைந்திட வவனுக்கக்கண்
ஐயமுற விளக்கிவைத்த தாவுதே யொலியுல்லாவே. (௪)

அங்ககண் விளக்கிவைத்த தாலவன் பூமிமுற்றுஞ்
சொன்னயப் பரிசுசெய்யச் சொந்தமா யிருந்துவாழ
நன்னயப் பொருளேநுந்த நன்மலர்ப் பாதந்தந்தென்
தன்னகம் வளரச்செய்வீர் தாவுதே யொலியுல்லாவே. (௫)

கனவிலோர் சிறுவன்கையில் வெள்ளிக்கா சொன்றையீந்துன்
றனைப்பெறுந் தந்தைதன்பாற் கொடுவெனச் சொற்றீரன்னோன்
மனத்தினி லுவந்துஞ்சொற்போ லளித்தன னவன்வாழச்செய்
தனத்தினை யுடையவைஷகு தாவுதே யொலியுல்லாவே. (௬)

ஒருத்தனுங் கபுறினோர்கால் நீட்டியே யுறங்கினோனை
வருத்தமில் லாதெடுத்து வயலினி லெறிந்தே யங்ஙன்
றிருத்தமா யுறங்கச்செய்தே யவன்பிழை பொறுத்தேதன்ம
தருத்தமைத் திடச்செய்சைகு தாவுதே யொலியுல்லாவே. (௭)

குக்கினோ யுள்ளோனொன்றனுங் குலவுநாள் தறுகாவேலை
பக்திசெய் புரிந்துநிற்க வொருபொழு தவன்றன்னோயை
யக்கண நீக்கியன்னோன் வாயினின் மருந்தையூட்டுந்
தக்கநல் வள்ளல்வைஷகு தாவுதே யொலியுல்லாவே. (௮)

தங்களின் சியாறச்செய்ய வருகின்ற பேர்கடம்மைப்
புங்கமில் லாமலேசிப் புகலுமவ் வாபிதுக்குப்
பங்கநோய் தன்னைவிட்டுப் பாருமோ ரதியநீத்த
சங்கையே பெற்றவைசகு தாவுதே யொலியுல்லாவே. (௯)

பெண்ணொருத்தியின் பேய்நீக்கி யூர்க்குப்போவென் றீரப்பெண்
உண்மகிழ்கொண் டும்பேரி லோர்கத்தமோ திப்பேக
வெண்ணினள் பணமிலாளப் போ *திறையா லொன்றீந்த
தண்ணரு ளுற்றவைசகு தாவுதே யொலியுல்லாவே. (௰)

கருவினிற் பிள்ளையில்லாள் கணவனுந் தானும்வந்தே
யொருமித்துந் தறுகாவேலை யுயருறச் செய்யமற்றை

---

* மயம் - அழகு.

* இறையாலென்பது கொழும்பில் வழங்கும் நாணயம் அஃது ரூபா-ரு.

# அல்லாபிச்சைப்புலவரவர்கள்பாடிய பாடல்கள்.

வருடமாஸ் மகனைப்பெற்றென் னிடத்தில்வா வென்றுசொற்ற
தருமமே தழைத்தஷைகு தாவுதே யொலியுல்லாவே. (கக)

காயில்வூர்க் காலிமென்றே யிருக்கையி னமக்கோர்செய்கு
தாமுண்டோ வென்றேயெண்ணித் தங்களின் சியாருச்செய்ய
வேமனம் வெறுத்தவன்னேற் கொருபிணி விட்டுநீத்த
தாமமே பெற்றசைகு தாவுதே யொலியுல்லாவே. (கஉ)

கங்கபிக் கீமான்கொண்டு நடந்தீவ ரோவென்றெண்ணிச்
சொன்னவன் கனவிற்போந்து துறைமுகம் மதுக்கேயீமான் [ன்
னன்னயத் தொடுநான்கொண்டே நன்மைபெற் றேனென்றன்னே
றன்னகங் கலங்கச்சொற்ற தாவுதே யொலியுல்லாவே. (கங)

அன்னவன்கலங்கியேங்கி யவன்வயிறூதியேநஞ்
சன்னிதானத்தில்வந்துஞ் சரண்புகவன்னேன்றுனே
சொன்னசொற்பொறுத்துக்காத்த சுகதாக்குருவேதூய
தென்னுறுகின்றசெய்கு தாவுதேயொலியுல்லாவே. (கச)

முத்துமாநகாடக்கி மொழிந்திடுஞ்சென்னையூர்க்குச்
சித்தியோடெழுந்துபோந்தோர் செட்டியினிடமருந்தா
கித்தியம்வேண்டிப்பற்று வாவுமேநெடுநாட்செய்த
த்துவமிகுத்தஷைகு தாவுதேயொலியுல்லாவே. (கரு)

ந்நயச்செட்டிநந்த மதிசயம்பார்த்துநெஞ்சி
லுன்னியேகுருவென்றோர்ந்தே யெவரிடத்திலுமேயோத
வன்னநாடொடுத்தவன்றன் னிடத்தினிலனுகாதுற்ற
தென்னலவூழ்வேசெய்கு தாவுதேயொலியுல்லாவே. (கசு)

புருஷனுத்தரவையின்றிப் பூவைநஞ்சியாருச்செய்ய
வரிசையோடெய்திநிற்க வல்லிநின்மணுவனின்றி
வரினிதுதகாதென்றோதி மற்றைநாண்மணுளனேடு
தரமுறவருகச்சொற்ற தாவுதேயொலியுல்லாவே. (கஎ)

பேய்பிடித்தாடுகின்ற பெண்ணொருத்தியின்கரத்தி
னேயநற்கிளியொன்றீந்த நித்தியத்தருவேயென்றன்
வாயகம்வாழ்த்துகின்ற வள்ளலேயெவர்க்குநல்ல
தாயகமானஷைகு தாவுதேயொலியுல்லாவே. (கஅ)

ஜாதிக்காய்ஜாதிபத்ரி தண்ணெனுமிச்சையோடும்
பேதிப்பில்லாதகொய்யாப் பழமுதற்பிரியமான

வேர்தமல்லினைகிராம்பு மூவப்புடனருளுமெங்கள்
சாநுசல்லாபசைகு தாவுதேயொலியுல்லாவே. (௧௯)

வரிசையும்பேறும்பெற்ற வள்ளலேவாகையுற்ற
குரிசிலேபேய்களீத்த கொண்டலேகுதாவின்சீரே
மருவியசெல்வரே யேர்மல்கியநுந்தம்பாதந்
தருமமாயருள்வீர்ஷைகு தாவுதேயொலியுல்லாவே. (௨0)

மேகநோய்முதலாயெந்த வியாதியுநீக்குந்தாளென்
தேகமேவளர்ந்தேயோங்கத் தந்தருள்செய்வீர்சேம
வாகமஞானகீத வாரிபேயன்பேயார்க்குந்
தாசமேதிர்த்தசைகு தாவுதேயொலியுல்லாவே. (௨௧)

நபிமுகம்மதுதம்பேறு நலமுறப்பெற்றநாவே
புவிபுகழ்மன்னே பொன்னே புண்ணியப்பொருளே சீரார்
நவமுறுஞ் சேமவாம நாதரே நன்மையார்ந்த
தவமுறு நாமசைகு தாவுதே யொலியுல்லாவே. (௨௨)

ஆரணவிளக்கே யாரு மாசைகொண் மணியேசீர்மெய்க்
காரணவிளக்கே காட்சி கண்டகா ருண்யமேரோ
சீரணிவிளக்கே நீதச் சீர்த்தியே பெருகிநிற்குந்
[illegible]ரிவிளக்கே ஷைகு தாவுதே யொலியுல்லாவே. (௨௩

எப்பிணியோர் களுந்தா னொழில்பெறு கின்றநுந்த
மொப்பிலாப் பெயரைநாடி யோதிலப் பிணியைநீத்துச்
செப்பமா யாளுகின்ற செவ்வியதருவே நேர்மை
துப்பிலா வாழ்வேசைகு தாவுதே யொலியுல்லாவே. (௨௪)

துங்கநற் கிருபைமேவுந் தூயரோ சுத்தமுள்ள
புங்கமே தங்கமேபொற் புஜபல மாருகின்ற
சிங்கமே பிங்கிரத்தின் சிறப்புறு நுந்தம்பாதஞ்
சங்கையா யருள்வீர்சைகு தாவுதே யொலியுல்லாவே. (௨௫)

அண்ணலே வண்ணமாரு மாசிக்கே யன்பேயார்க்கும்
புண்ணியந் தனைச்செய்கின்ற புகழுறு நாதரேயென்
கண்ணிருமணியே யென்றன் கல்புறு கனியேபாத
தண்ணருள் புரிவீர்சைகு தாவுதே யொலியுல்லாவே. (௨௬)

எனக்கென்று முதவிசெய்தே யென்றுயர் தீர்த்தேமேன்மை
கனக்குநுந் தாளைத்தந்தே காத்தருள் புரிவீரையா

மனைக்கணி னிருந்துவாழு மாதவப் பொருளேயாதி
தனக்குவப் புற்றசைகு தாவுதே யொலியுல்லாவே. (உ௭)

நித்தியக் காவலோர்க ணியமமோ டெய்தியேற்றுஞ்
சித்தியே பெற்றபாதச் செம்மலே சேமமாக
வித்தகச் சத்துலாவும் வேதரோ விருப்பமார்ந்த
தத்துவ மிகுத்தஷைகு தாவுதே யொலியுல்லாவே. (உ௮)

காத்தருள்புரிவீரொற்குக் கருணைசெய்தருள்வீர்நல்ல
கோத்திரத்துற்றகோவே குணங்குடிகொண்டகாவே
தோத்திரக்குருவேதூய சம்பன்னசோதியான
தாத்துவந் துற்றசைகு தாவுதேயொலி யுல்லாவே. (உ௯)

எப்பிணி யோர்களையு மெவ்விடத் திருந்துதேடு
மப்பெயரோர் தங்நோயு ம்கற்றிய வண்ணலேநேர்
செப்பிடும் பொருளே யென்றுஞ் செயம்புரி பாதமென்றன்
தப்பற வருள்வீர்சைகு தாவுதே பொலி யுல்லாவே. (௩0)

வேறு.

உந்தம்பதமே யுத்வியென்றே யுண்மையுடனே நெஞ்சுவந்தே, வந்தபையற்கும் பதத்தை வாகாயின்னே தந்தருள்வீர், சங்கமமும் புயமுடைய தாஹாநபி முகம்மதுதஞ், சின்... பூம் பேருடைய ஷெய்கேதாவூ தெனுமொலியே. (௩௧)

நாவில்நுந்தம் பதமலரோ நவிற்றியதன்பீ தாசைகொண்டே, சேவித்தென்றுந் தேடும்பிந்தச் சிறியவடிமை தனக்கிரங்கி, மேவும்பாத மலரதனை மேன்மைபெறவே தந்தருள்வீர், தேவர் முதலோர் நிதந்துதிக்குஞ் செய்கேதா வூதெனு மொலியே. (௩௨)

அருந்த வருந்தத் தெவிட்டாத வமுதே யரசே யருள்சிறந்து, பொருந்து முந்தம் பதமலரைப் போற்றும்பயலுக் கருள்புரிவீர், மருந்தேமலரோ மாட்சிபெறும் மணியேயணியே மரகதமே, திருந்துந் தவத்தோர்க் கருள்புரியுஞ் செய்கேதாவூ தெனுமொலியே. (௩௩)

கருணைசிறந்த காமுடையீர் காட்சிசிறந்த வாமுடையீர், அருணவொளி யிற்றிகழ்ந்திலங்கு மழகேயன்பே யாவருக்கும், பொருளேனர் சிறக்கச் செயுந்திருவே புகழேநிறைந்த நும்பதத்தைத், தருணமிதுவே யருள்புரிவீர் ஷைகேதாவூ தெனுமொலியே. ()

தேனேவானோர் புகழுகின்ற தெளிவே யொளிவே தெள்ளி
யவி, மானேபாரோர் மகிழுகின்ற மதியேகதியே மன்னவர்கள்,
கோனேயானே தேடிடுமென் குருவேமருவே யெனக்கருணைத்,
தானேதந்தும் பதமருள்வீர் ஷைகேதாவூ தெனுமொலியே. ()

கோதையொருத்தி தனையணைந்த கணவன்றனக்கே பயித்தி
யங்கொண், டேதில்நுந்தாள் வணங்கக்கண விசைத்திருன்பெ
ண்ணிக் காஹனைபிப், போதிற்பிரித்தே யெழுதினின்றன் வெ
றிபோமெனவே யவனதுபோ, லேதமறவே செயவுய்ய விசைத்
ததாவூதெனு மொலியே, (௩௬)

வே று.

கருணையங்கடலே கற்பகத்தருவே காசினியோர்முத லெவ
ரும், பொருணயமுறவே தேடிடும்பொருளே பூரணநிறைந்தமா
மதியே, யருணயத்தமுதே யாநந்தப்பெருக்கே யாக்கமே சிறந்த
நும்பதத்தைத்,தருணமீதுவந்தே தந்தருள்புரிவீர் சாகிபேதாவு
தெம் மொலியே. (௩௭)

சந்தமும்பெருகுந் தானமும்பெருகுஞ்சார்ந்தபேர் தம்மை
யுங்காக்கும், விந்தையும்பெருகும் புந்தியும்பெருகும் விகசித
நாட்குநாட் பெருகுந், சுந்தரம்பெருகுஞ் சோபனம்பெருகுஞ்
சுகிர்தமேபெருகு நும்பதத்தைச், சந்ததந்தந்தே யருள்புரிந்தரு
ள்வீர், சாகிபேதாவுதெம் மொலியே. (௩௮)

காரணம்பொருந்துங் கதிநனிபொருந்துங் காட்சிகணாட்கு
நாட் பொருந்தும், பூரணம்பொருந்தும் புதுமணம்பொருந்தும்
புதுமைகணிதமுமே பொருந்தும், தாரணியோர்கள் சகலரும்
பொருந்துந் தருமமெப்போதுமே பொருந்தும், * தாரணைபொ
ருந்து நும்பதமருள்வீர் சாகிபேதாவு தெம்மொலியே. (௩௯)

மலரதும்வளரும் மகிமையும்வளரும் மகத்துவநாட்குநாள்
வளரும், நலமதும்வளரும் நன்மையும்வளரும் நயமதும் மயமது
ம்வளரும், பலமதும்வளரும் பாக்கியம்வளரும் பண்புமெப்போ
துமே வளருந், தலைமையும்வளரு நும்பதமருள்வீர் சாகிபேதா
வுதெம் மொலியே. (௪0)

கனந்தினந்தழைக்குங் கன்னியந்தழைக்குங் கமழ்நிதந்தழை
க்குமா புகழ்ச்சி, தினந்தினந்தழைக்குஞ் செல்வமுந்தழைக்குஞ்

* தாரணை - உறுதி.

சீரதும்பெருகியே தழைக்கும், மனந்தினந்தழைக்கும் மகிழ்வ
துந்தழைக்கும் மங்கலந்தழைக்குநல் லுறுதித், தனந்தினந்த
ழைக்கு நும்பதமருள்வீர் சாகிபேதாவு தெம்மொலியே. (௪௧)

தங்கமும்வாழுஞ் சயமுமேவாழுந் தன்மமுநித்தியம் வா
ழும், புங்கமும்வாழும் புண்ணியம்வாழும் பூரணநிதநிதம் வா
ழுந், துங்கமும்வாழுஞ் சுத்தமும்வாழுஞ் சூழ்ச்சியும் நிதநிதம்
வாழுஞ், சங்கையும்வாழு நும்பதமருள்வீர் சாகிபே தாவுதெம்
மொலியே. (௪௨)

வேறு.

சகலநோய் தன்னைநீக்குஞ் சஞ்சீவிமருந்தே நும்மைப்
பகலிரவினு மெப்போதும் பாடிடும் பயற்கிரங்கி
நகையுறு மன்புகூர்ந்தே நளினபொற் பாதந்தன்னைத்
தகைபெற வருள்வீர்ஷைகு தாவுதே யொலியுல்லாவே. (௪௩)

பெருமைசேர் தவமேயார்க்கும் பேய்முதற் பிணிகணீக்கு
மருமையார் தவமேயார்க்கு மாசைசேர் நவமேயென்றும்
மருதிகழ்ந் தோங்கிநிற்கு மாணிக்கமே நற்கற்ப
தருநிகர்பதந் தந்தாள்வீர் தாவுதே யொலியுல்லாவே. (௪௪)

என்றுயரனைத் துந்தீர்த்தே யெற்கொருமக வைத்தந்தே
அன்புறுங்கிரு பைசெய்தே யனுதினம் பாதமீந்தே
தென்னுறுங்கண் ணாற்பார்த்தே சிறியனை யாள்வீரையா
தன்மையே மிகுத்தஷைகு தாவுதே யொலியுல்லாவே. (௪௫)

சென்னையி லிருந்துநுந்தஞ் சீர்த்தியே பெருகிவாழும்
பொன்னடி காண்கவந்த புன்மையேன் குறையைநீக்கி
யென்னகம் வளரச்செய்வீ ரேந்தலே யெந்தநாளுந்
தன்னவனருளார் ஷைகுதாவுதே யொலியுல்லாவே. (௪௬)

அற்புதக்கருவேசேம வாநந்தத் திருவே நல்ல
கற்பகத்தருவேகல்விக் களஞ்சியப் பொருளே நுந்தம்
பொற்பதமெற் கிப்போதே பூரிக்கவருள்வீ ரென்றன்
சற்குருவான ஷைகுதாவுதே யொலி யுல்லாவே, (௪௭)

நுந்தங்காரணத்தை யெம்மால் நுவலுதற் கேலாதையா
விந்தையும் பேறும்பெற்ற விகசிதத்தருவே வீரச்
சுந்தரம் பெருகிவாழுந் தூயநும்பாதந் தன்னைத்
தந்தருள் புரிவீர்சைகு தாவுதே யொலியுல்லாவே. (௪௮)

பொருட்சொல வாக்கைத்தந்தே புகழ்நிதம் பாடத்தந்தே
யருட்செல்வப் பொருளைத்தந்தே யன்புறும் பலனைத்தந்தே
மருத்தரும் பாதந்தந்தே வாழ்ந்திடச்செய்வீர் நன்மைத்
தருத்தழைத் திடச்செய்ஷைகு தாவுதே யொலியுல்லாவே. ()

தேசுயர்ந் திலங்குமுத்து மாநகர் தினம்வாழ்கின்ற
வாசமார்கோவே நுந்தம் வண்மைசேர் பாதம்போற்றி
நேசநற் கவிதைதன்னை நிகழ்த்திடும் அல்லாபிச்சைத்
தாசனையாள் வீர்ஷைகு தாவுதே யொலியுல்லாவே. (௧௦)

முனாஜாத்து முற்றிற்று.

114904

---

முப்பத்திரண்டடி யாசிரிய விருத்தம்.

ஆதியொருவன்கருணையே பெருகிநிததியமு
மழகாயுறைந்த வொலியே
அருமதுமுகம்மது றசூல்நபிதுஆப்பேற
தனுதினநிறைந்த வொலியே
அன்புற்றபெரியோர்கள் சிறியோர்களுட்டம
தறிந்துதவிசெய்யு மொலியே
அரசர்வந்தும்பதம் வணங்கியேகாணிக்கை
யருளிடப்பெற்ற வொலியே
அருளுற்றவெத்தேச முள்ளவருவந்துநும்
மடிபணிய வாழுமொலியே
அன்னதானஞ் சொன்னதானமுதலெவையுமே
யருள்கின்ற சேமவொலியே
ஆநந்தசெல்வமே பொங்கிநிதமோங்கியுய
ரற்புதநிறைந்த வொலியே
அரியசுந்தரவாவிபொழில் சூழுமுத்துநக
ரரசாட்சிசெய்யு மொலியே.
பூதலமுறைந்தமனிதர்க்குரிய பேய்பிணிகள்
போக்கியாள்கின்ற வொலியே
புலவோர்கள்சொல் வாக்கியங்களுக்குதவியெப்
பொழுதுமேபுரியு மொலியே
புந்திமகிழ்ந்தரத் துறுமதியொளிக்கின்ற
பொற்பதம் பெற்றவொலியே

புஜபலம்பெற்ற வருநசையுற்றபெய்யர்களும்
போற்றியே புகழுமொலியே
புங்கமுள தங்கமும் எங்களுக்குதவியுள
பொருள்களுந் தந்தவொலியே
புண்ணியத்தருநிக ரிலாதகரமுடையநற்
பூபதியதான வொலியே
புண்ணுறும்வியாதியைத் தண்ணளிபதத்தினற்
போக்கியருடந்த வொலியே
பூரணதயாளமுள காரணவிநோதமுள
பொறுமைநிறைகின்ற வொலியே
சோதியேமேவிவளர் துங்கநவநீதமே
சூழ்ந்திருக்கின்ற வொலியே
துய்யசம்பன்ன சைதன்யசல்லாபமே
சொந்தமாயுற்ற வொலியே
சுந்தரம்பெருகுமருள் சந்ததம்விளங்கியே
துலங்கிநிற்கின்ற வொலியே
சோபிதமகாபுனித கிந்தில்கள்சூழ்ந்திடச்
சுகமசகவாழு மொலியே
சூழ்ச்சியப்பொருளெலா மாட்சிசெயவந்தவொரு
தூயமணியான வொலியே
சுத்தாங்கம்வளர்தத்வ லட்சணசுஹானுபவ
சுத்தியேபெற்ற வொலியே.
சுகீதசாசுவதநிட்கள சுஹானந்தஜய
சுத்தமேயுற்ற வொலியே
சொகுசெலாமொன்று யமைந்துருக்கொண்டுநற்
சுயந்துங்குமரத்ன வொலியே
சாதசாலோகசா மீபசாரூபசா
யுச்சியந்தங்கு மொலியே
சார்ந்தபேர்தம்மையே யாதரித்தாள்கின்ற
தருமந்தழைத்த வொலியே
தயவ்துந்நயமதும் மயமதுஞ்சயமதுந்
தங்கிவளர்கின்ற வொலியே
தத்துவமுமுற்றுநிறை சித்தியுமுறைந்திடு
தயாநிதியதான வொலியே

ஷாஹிதீனுசிக்கீனுபி தீமெலவர்களுஞ்
சங்கையொடுபோற்று மொலியே
தன்னுற்றவிண்ணவர்கள் வந்துசுபசோபனந்
தருதியொடுகூறு மொலியே
தங்களிருபதமலனை யெப்பொழுதுமேபோற்றி
ஜயகவிதைதன்னை நாளுஞ்
சாற்றும்அல்லாபிச்சை தனையடிமைகொண்டருள்செய்
தர்வுதெனு மொலியுல்லாவே.

முப்பத்திரண்டடியாசிரியவிருத்தம் முற்றிற்று.

---

## தாய்மகள் வினாவிடை.

---

இராகம்-புந்நாகவராளி.

ஆதியருளனுதினமு மன்புடனேயுற்றவரார் தாயே - அதுகேள்
போதரிறைவெவர்க்குமருள் புரியுஞ்செய்குதாவூதொலி மகளே.

நபிமுகம்மதுறசூல்தம் நற்பேறுபெற்றவரார் தாயே - அதுகேள்
சவுபாக்யமுளசம்பன்ன ஷைகுதாவூதொலியுல்லாவென் மகளே.

தாயம்வளர்க்கிலங்குகின்ற தகுதியுள்ளபுண்யரெவர் தாயே - அது
சேமநாமமேவிளங்குஞ் செய்குதாவூதொலியுல்லாவென் மகளே.

காரணங்கணிதநிதமுங் காட்டுகின்றகாமிலெவர் தாயே - அது
சீரணிந்தசீர்த்தியுள்ள செய்குதாவூதொலியுல்லாவென் மகளே.

பேய்பிணிகள்முதலான பிக்ககலச்செய்பவரார் தாயே - அது
நாயகமாய்விளங்குகின்ற ஷைகுதாவூதொலியுல்லாவென்-மகளே

முப்புவனத்தோர்நிதமு முக்கியமாய்ப்புகழ்பவரார் தாயே-அது
தப்பொழிக்குஞ்சங்கையுள்ள சைகுதாவூதொலியுல்லாவென்-மக

கனவுதனிலேயொருத்தன் காதின்மருந்தருளினதார் தாயே-அ
தினமுமன்பர்தமக்கிரங்குஞ்செய்குதாவூதொலியுல்லாவென்-மக

நித்திரையின்மருந்தையொத்தன் னேசவாயிலூட்டினதார் தா-அ
சத்துயருஞ்சுத்தியுள்ள ஷைகுதாவூதொலியுல்லாவென் மகளே.

கன்மநோயையொருநொடியிற் களையமருந்தளித்தவரார் தா-அ
தன்மமென்றும்பெறுஞ்சஞ்சீவி சைகுதாவூதொலியுல்லாவென்ம

## கஉ அல்லாபிச்சைப்புலவரவர்கள்பாடிய பாடல்கள்.

கையிற்பணமில்லாற்குக் கனவிற்பணங்கொடுத்தவரார் தா-அது
மெய்விளக்கும்பொய்யொழிக்கும் மேன்மைசெய்குதாவுதொலி.

ஒருத்தன்விளைவாதமதை யறுத்தொழித்தவேந்தரெவர் தா - அ
கருத்தறிந்தேயுதவிசெய்யுங் கருணைசெய்குதாவூதொலி மகளே.

அந்தகனுக்கிருவிழியை யன்புடனேவிளக்கினதார் தாயே - அது
கந்தமெந்தநாளுங்கமழ் காமில்செய்குதாவூதொலி மகளே. (கஉ)

அந்தரத்தின்மதியொளிக்கு மழகுபதம்பெற்றவரார் தாயே-அது
சிந்தைநிதம்மகிழுகின்ற செய்குதாவூதொலியுல்லாவென் மகளே.

வயிற்றின்மயிர்முளைக்கக்கட்டி வயிற்றையமிக்கெடுத்தவரார் தா
ஜெயத்தருளுங்கயத்தருளுஞ் சிறந்தசெய்குதாவூதொலி மகளே.

இடங்கரின்வாய்ப்பட்டொருத்தன் எவர்பேர்சொல்லவிட்டதெ
[றன் தாயே - அதுகேள்

திடம்பெருத்தமகத்துவத்தின் செய்குதாவூதொலியுல்லாபேர் ம.

மகமைநெற்கொடாதவனை மாவேறிக்கொன்றவரார் தாயே-அது
தகைமைதங்கிவளருகின்ற ஷைகுதாவூதொலியுல்லாவென் மக.

அடங்கியபின்னற்புதங்கள் அநேகமுஞ்செய்பவராரென் தா - அ
தி. ..பெருகியுயர்ந்திலங்குஞ் செய்குதாவூதொலியுல்லாவென் ம

பனியிசுறுயில்கூட்டப் பாத்திபுரானென்னருமைத்தாயே - அது
தனசம்பத்துமருள்சம்பத்துந் தங்குஞ்சைகுதாவூதொலி மகளே.

சிமைபங்காளம்முதலாய்ச் சிறந்தபெயர்பெற்றவரார் தாயே - அ
தேமணக்குஞ்செல்வதுரை செய்குதாவூதொலியுல்லாவென் மக.

நாடுநாட்டப்படிக்கருளுநாயகராரென்னுடைய தாயே-அதுகேள்
தேடும்பொருளெவையுந்தருஞ் செய்குதாவூதொலியுல்லாவென்.

சார்ந்தபேர்கடம்மைநிதந் தற்காத்திரட்சிப்பதார் தாயே - அது
சேர்ந்தவம்போருகப்பதமே திகழுஞ்செய்குதாவூதொலி மகளே.

செய்குதாவூதொலியென்றே செப்புநர்கட்கென்னபலன் தா - அ
உய்யும்படிக்குதவிசெய்தே யுற்றகுறைபோக்கிடுமென் மகளே.

சுந்தரசொரூபவன்னச் சொகுசுபெற்றசாகிபெவர் தாயே - அது
சிந்தைதிடம்பெறவருளைச் செய்யுஞ்செய்குதாவூதொலி மகளே.

கந்தாபிவ்வொலியுடைய கரங்கண்டபோதொளிப்பதென்ன தா
சந்ததமுந்தருமமிருந்தாதா தாஜூதொலியென்றென் மகளே.

வஞ்சனைக்குணியந்தன்னை வாகுடனேயெடுப்பவரார் தாயே - அது
செஞ்சொலினாலுலகம்புகழ் சிறந்தசெய்குதாஜூதொலி மகளே.

புந்திநிறைவிந்தையுறை புகழ்பெருத்தபுண்யரெவர் தாயே-அது
சிந்தையினினினைத்தபடி செப்புஞ்செய்குதாஜூதொலி மகளே.

இவருடையகாரணத்தை யெவரியம்பவல்லவரார் தாயே - அது
தவமுயன்றபெயராலுஞ் சாற்றவேலாதென்கண்மணி மகளே.

தஞ்சமென்றேவந்தவர்கள் தம்மைரட்சிப்பவராரென் தாயே - அ
செஞ்சரணமலருடைய செய்குதாஜூதொலியுல்லாவென் மகளே.

காமிலும்ஹாபிலுநிதமே காட்சிபெறத்துதிப்பவரார் தாயே-அது
சேமமிகுத்தேவளருஞ் செய்குதாஜூதொலியுல்லாவென் மகளே.

ஆசையாய்வினவிடைசொல் அல்லாபிச்சைக்குதவுவரார் தா-அ
தேசுமுத்துநகர்வாழுஞ் செய்குதாஜூதொலியுல்லாவென் மகளே.

தாய்மகள் வினவிடை முற்றிற்று.

---

பதம்-இராகம்-சிந்து.

பல்லவி.

பாதமலரருள்வீர்-பையல்நிதம்
பாக்கியத்தைவையகத்தி லாக்கமுறப்பெற்றிடநும்

அநுபல்லவி.

காதமணம்வீசும் ஹபிபுல்லா
காட்சிதனைப்பெற்றுமிகு மாட்சிமைநிறைந்திலங்குஞ்
சாதவணந்தேசும் சந்தமுள்ள
தத்துவதாஜூதொலியே யுத்தமஞ்சேர்நுந்தமிரு பாத

சரணங்கள்.

நீதராஜர்களும் நித்தியமும்
நிச்சயித்துப்பட்சமுற வுச்சிதம்பெறவேவந்து
போதமுறவணங்கிப் போற்றிசெய்யும்
புங்கதாஜூதொலியென்னுஞ் சிங்கமேநுந்தமிரு பாத

 அல்லாபிச்சைப்புலவரவர்கள்பாடிய பாடல்கள்.

தாமஜயமீறுஞ் சங்கையுள்ள
சத்துவமும்வித்தையது நற்றவமுமுற்றிலங்கும்
வாமநயமேறும் வண்மைபெற்ற
வள்ளல்தாவூதொலியேயென் னுள்ளமகிழ்நுந்தமிரு பாத

நேசமந்திரமே நிச்சயித்து
நித்தியமுமோதுகின்ற சித்தியுள்ளகாயில்களும்
வாசமுடன்வந்தே வாழ்த்தல்செய்யும்
வண்ணதாவூதொலியேநற் றண்ணருளுநுந்தமிரு பாத

புங்கமுறும்வாவி பொழில்சூழும்
புகழுமுத்துநகரிற் றிகழுந்தாவூதொலியே
உங்கள்பெயர்கூவி உயர்கவி
உல்லாசமாகச்சொல்லும் அல்லாபிச்சைக்கும்மிரு பாத

பதம் முற்றிற்று.

---

பதம் இ-ம். உசேனி கியால்மெட்டு திரிபுடைதாளம்.

பல்லவி.

துங்கமார்பதமே துணையே யருள்வீர் நிதமே

அநுபல்லவி.

சங்கைகலஞ்சேருஞ் சாலோகசாமீபசாரூப சாயுச்யமே நாளுந்
தங்கிவளருந்தருமநயஜய ஷைகுதாவூதொலியே - துங்க

சரணங்கள்

ஆதியருளுமகுமதுபேறு மனுதினம்பெற்றோரோ - இன்னும்
சாதுரியமுற்றசல்லாபமார்ந்திடுஞ் சைகுதாவூதொலியே. துங்க

அற்புதம்பொற்புறுங்கற்பகந்தன்னை யகற்றியகையுடையீர்-நாளு
சற்குணமேவியுயர்ந்தருள்பெற்றிடுஞ் சைகுதாவூதொலியே. து

பாதகநோய்களைப்பார்மிசைநீத்தசௌ பாக்கியசற்குருவே-இன்
சாதமிகுத்தசம்பன்னமகத்துவ ஷைகுதாவூதொலியே. துங்க

இஞ்சொல்லனுதினம்பெற்றேயிலங்கு மிசையுள்ளநாயகமே - நா
தஞ்சமென்றேவந்தபேர்களைக்காத்தாளுஞ் சைகுதாவூதொலியே

பண்ணுறுஞ்சாதிக்காய்ஜாதிபத்திரியொடுபச்சைக்கிராம்பேலம் இ
தண்ணெனுமிச்சைமலர்முதற்றந்திடுஞ் சைகுதாவூதொலியே. து

நெஞ்சிலுவத்துமகிழ்ந்துபுகழ்ந்துநிதந்தேடும்மையனுக்கு-நாளும்
செஞ்சாரணந்தந்துகாத்தருள்செய்வீர்ஷெய்குதாவூதொலியே. து

நம்பியபேர்க்குநயத்தையருள்கின்ற நாயகமானோரே - இன்னும்
சம்பத்துப்பெற்றிடுஞ்சையோகவுல்லாச ஷைகுதாவூதொலியே.

பூரணகாரணமேவிவளர்ந்திடும் புண்யசிரோமணியே - நாளுந்
தாரணியோர்கள்வந்தேபுகழ்ந்தேற்றிடுஞ் சைகுதாவூதொலியே

ஆரிபீனுசிக்கீனுபிதீன்ஷாஹிதீ னன்புகொண்டேயுவந்து - இன்
தாரிபுசெய்துமனமகிழ்ந்தேத்திடுஞ் சைகுதாவூதொலியே. து

வாசகமென்றும்வந்தேயங்களைக்கூறி வாழ்த்துந்தயாநிதியே - நா
தீனவரென்றும்வந்தேபுகழ்ந்தேற்றிடுஞ் செய்குதாவூதொலியே.

பேய்பிடித்தாடிடும்பெண்கரத்தோர்கிளி யெட்புடனேயளித்த
[நல்ல
தாயகமானசலாக்கியதத்துவ ஷைகுதாவூதொலியே. துங்க

அல்லலகற்றிநல்லாதரவுசெய் தனுதினம்ஆள்வீரோ நாளுஞ்
செல்லொளிக்குங்கரம்பெற்றுவளர்கின்ற செய்குதாவூதொலியே

அன்பும்பொருளுந்தெருளுமருளு மமைந்துருக்கொண்டோரே
[இன்னுந்
தென்னுறுஞ்செல்வமுஞ்சீருஞ்சிறந்திடுஞ் செய்குதாவூதொலி
[யே. துங்க

காமிலுங்காத்திபும்ஹாபிலும்ஹாஜியுங்காட்சிதனைப்பெறவே-நா
சேமமுறவேவந்தேபணிந்தேத்திடுஞ் செய்குதாவூதொலியே-து

போற்றும்பொழில்சூழுமுத்துநகர்வாழும் புண்யதாவூதொலியே
[கவி
சாற்றும்அல்லா பிச்சைதன்னையெந்நாளுமே தற்காத்தருள்புரி
[வீர். துங்க

பதம் முற்றிற்று.

---

பதம் கண்ணிகள் இ-ம்-இந்துஸ்தான்மெட்டு, ஆதிதாளம்.

பல்லவி.

சித்தமகிழ்ந்திடுமுத்தமபதமலர் தினமுந்தருவீரோ
சீர்பெருகுஞ்செய்குதாவூதொலியே ஜெயமருள்புரிவீரோ.

## கசு. அல்லாபிச்சைப்புலவரவர்கள்பாடிய பாடல்கள்.

1262

அநுபல்லவி.

சுத்தமக்களுவகளுதிவிளக்குஞ் சோதியினருள்மேவிச்
சித்திரீதம்பெறுதிவ்வியமுற்றிடுஞ் செய்குதாவூதொலியே. (சி

சரணங்கள்.

காரணபூரணநபிமுகம்மதுதங் கருணைபெறுந்துரையே
தாரணிமேவுதயாநிதியாகிய ஷைகுதாவூதொலியே. (சித்த

விந்தைசிறந்துவிளங்கியசுந்தர வேதநன்னயகமே
சந்ததமிங்கிதமோங்கிவளர்ந்திடுஞ் சைகுதாவூதொலியே. (சித்)

புந்திநிறைந்துயர்புண்ணியமுற்றிடும் புங்கவமுங்குருவே
சந்தமுறைந்துதழைத்துவளர்ந்திடுஞ் சைகுதாவூதொலியே. (சி)

என்றுயர்திர்த்தேயெனக்கருள்புரிவீ ரிசைமிகவளர்தானம்
தன்மம்வளர்ந்துதழைத்தருள்பெற்றிடுஞ் சைகுதாவூதொலியே.

யோகசவுக்கியவுண்மைபொருந்திய வொண்ணுறுநம்பதமென்
தேகம்வளர்ந்துதழைத்திடவருள்வீர் செய்குதாவூதொலியே. சி

மேகமுதற்பல்பிணிகளைநீக்கிய மேன்மைசேர்நம்பதமென்
ஆகமகிழ்ந்துபுகழ்ந்திடவருள்வீர் ஆரிபேஷைகொலியே. (சித்)

யோகம்நேகரவீகைபொருந்திய வுத்தமநம்பதமென்
ஆகமகிழ்ந்துசெழித்திடவருள்வீர் ஆசிக்கேஷைகொலியே. (சி)

கடம்வளர்பொழில்சூழ்தரளமாநகர்வாழ் ஷைகுதாவூதொலியே
அடிமையாம்அல்லாபிச்சையைக்காத்தே யாளுமெந்நாளினுமே.
(சித்தம்.)

குலசேகரன் பட்டணம்
சர்க்கரைசாகிபுத்தம்பியவர்கள் குமாரராகிய
அல்லாபிச்சைப் புலவரவர்கள் பாடிய
பாடல்கள் முற்றுப்பெற்றன.

114904